# ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

## பொது குழுக்கூட்டம் (04-09-2022)

1. நமது இயக்கத்தின் 20-வது பொதுகுழுக் கூட்டத்தின் (10-07-2022) தொடர்ச்சியாக இன்று (04-09-2022) கடவுள் வாழ்த்துடன் தலைவர் தலைமையில் பொதுக்குழு தொடங்கியது. பொதுகுழு கூட்டத்திற்கு 27 உறுப்பினர்கள் மட்டுமே கலந்துக் கொண்டனர். இப்பொதுக்குழுவுக்கு உரிய கோரம், (quorum) அதாவது 50 உறுப்பினர்கள் வரவில்லை. இருப்பினும் இது இரண்டாம் முறையாக நடத்தப்படுவதினால், கோரம் (quorum) தேவையற்றதாகிறது.. பொது செயலர் வரவேற்புரை வழங்கினார். அடுத்து தலைவர் உரை ஆரம்பமானது.

2. தலைவர் ,தமது உரையை துவங்கும் போது. திரு ராமலிங்கம் அவர்கள் இடை மறித்து, தலைவர் பொதுக்குழு கூட்டம் நடைபெறுமுன் சில தகாத வார்த்தைகள் கூறினார் என்றும் அதற்கு விளக்கம் அளிக்குமாறு கேட்டார்.. திரு மனுராஜ் தலைவரானதைப் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. தலைவரின் நியமனம் 30-07-2022 அன்று நடந்த செயற்குழுக் கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்கப்பட்டதை பொது செயலாளர் விளக்கிக் கூறவும் அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தலைவராகப் பொறுப்பேற்றிருந்த திரு மனுராஜ் அவர்கள் மன்றத் தகாமைக்கு ஒவ்வாத சில (unparliamentary words) சொற்களை உபயோகித்தார் என திரு மகாலிங்கம் குறிப்பிட, திரு மனுராஜ் அதற்கு விளக்கம் கூற மறுத்துவிட்டு, தான் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதாக கடிதம் கொடுத்துவிட்டு இறங்கிவிட்டார்.

3. “கூட்டத்தில் யாராவது தலைமை தாங்கி நடத்த விருப்பமா?” என்ற கேள்வி வந்த போது, திரு நபீஸ் அஹமத் அவர்கள் தலைமை தாங்க முன்வந்தார். அவரது உரையில், தான் இந்த இயக்கத்தின் நீண்ட நாள் உறுப்பினர் என்றும், இயக்கத்தின் செயலாளர் பதவி வகித்திருந்ததாகவும் கூறினார். முன்னாள் தலைவர் திரு அரசு அவர்கள் தொடங்கிய “ மக்கள் நல் வாழ்வுக்கட்சி” யில் சேரும் பொழுது செயலாளர் பொறுப்பிலிருந்து விலகினதாகக் கூறினார். தற்பொழுது தான் அந்த அரசியல் கட்சியிலிருந்து விலகி விட்டதாகவும் எடுத்துரைத்தார். கூட்டத்தை நடத்த யாரும் முன்வராததினால், தான் முன்வந்ததாகவும் குறிப்பிட்டார்.

4. பொது செயலர் திரு.வே. கார்த்திகைராஜன் 2021-2022 க்கான ஆண்டறிக்கையை அறிவித்தார். .இரண்டு ஆண்டுகளாகக் கொரனாவால் பொதுகுழுகூட்டம் நடைபெறாததற்கு வருத்தம் தெரிவித்தார். 2021-2022 ம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஆண்டறிக்கையை விவரித்து பேசினார். நேர்மை நெறி இதழ் வெளியிடுவதற்கான தேவையான ஆ.என்.ஐ.ன் (RNI) ஒப்புதல் இதுவரை கிடைக்கவில்லை என்று கூறினார். அமைச்சர் செந்தில் பாலாஜி மீது ஊழல் வழக்கு பற்றி உரையாற்றினார்

5. அடுத்துப் பேசிய மாவட்ட செயலர் திரு.எம்.கலியப்பெருமாள் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களை, செல்வந்தர்கள் ஆக்ரமிப்பதாகவும், அவற்றில் அவர்கள் சாகுபடி செய்வதைப்பற்றி பற்றி உரையாற்றினார். பக்கத்து மாவட்டங்களில் உள்ள நம் உறுப்பினர்களும் உறுதுணையாக வர வேண்டுமென

வேண்டுகோள் விடுத்தார். இந்த நாட்டில் ஊழல் இல்லாமல் எதுவும் நடக்காது என்ற நிலைமை வந்துள்ளது என்றும் கூறினார்.

6. அடுத்துப் பேசிய திருவள்ளுவர் மாவட்ட உறுப்பினர் திரு. சுப்ரமணியன் அவர்கள் நமது இயக்கத்தின் பெருமைகளை விளக்கி வாழ்த்தினார். அனைத்து உறுப்பினர்களும் மதிப்புடனும், மரியாதையுடனும் ஒற்றுமையாக செயல்பட வேண்டுமெனக் கூறினார். இயக்கத்தின் அடையாள அட்டையில் முன்னேற்றம் கொண்டுவர வேண்டுமென கோரிக்கை வைத்தார்.

7. அடுத்ததாகப் பேசிய தஞ்சை மாவட்ட உறுப்பினர் திரு.குணசேகரன் அவர்கள், அவர் உரையாற்றும் போது தன்னுடைய பணிகாலத்தில் நேர்மையாக இருந்ததால் ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி விவரித்தார். நமது இயக்கத்திற்கு குறைந்தது ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டுமெனவும் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களின் பங்களிப்பு அவசியம் என்றும் விளக்கினார். இயக்கம் மிகுந்த உயிரோட்டமாக எப்பொழுதும் இருக்க வேண்டுமெனெ உரையாற்றினார். ஊழலை எதிர்த்து நாம் தொடர்ந்து போராட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பொதுநல வழக்குகள் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

8. அடுத்துப் பேசிய வேலூர் மவட்ட (அரக்கோணம்) உறுப்பினர் திரு அக்னி பாலக் தமில் நாடு மின்வாரியத்திலுள்ள சில ஊழல்களை விவரித்தார். முடிவில் நமது இயக்கத்தை வாழ்த்தி விடை பெற்றார்

9. அடுத்துப் பேசிய திருச்சி மாவட்டத் தலைவர் திரு.எம்.சுதாகர் ஏசுவடியான் அவர்கள் நமது இயக்கத்தின் வலைதளத்தில் உள்ள குறைகளை சரிசெய்யுமாறு வேண்டிக்கொண்டார் இயக்கத்தின் உறுப்பினர்களை அதிகமாக்கி,, அதிக மாவட்டங்களில் கிளைகள் அமைக்க வலியுறுத்தினார்.

10. அடுத்ததாக கோவை மாவட்ட செயலர் திரு. வேலு அவர்கள் உரையாற்றினார். அவர் இயக்கத்துக்கு வாழ்த்துகள் வழங்கி மென்மேலும் தொடர்ந்து பிரபலமாக வேண்டுமென .வாழ்த்தினார். அதே மாவட்ட உறுப்பினர் கந்தசாமி அவர்கள் நமது இயக்கம் அடைந்த வெற்றிகளை எடுத்துரைத்தார். நமது மாவட்ட அலுவலர்கள் ஊழல் புகார் குற்றங்களைப் பற்றி அந்தந்த அதிகாரிகளிடம் இடைவிடாது கேள்விகள் கேட்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

11. அடுத்தபடியாக, நம் இயக்க உறுப்பினர்கள் அனைவரும், தலைவர் தலைமையில் ஊழல் எதிர்ப்பு உறுதிமொழியை வாசித்து உறுதி ஏற்று கொண்டனர். நமது இயக்கத் துணைத் தலைவர் வருகை புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். முடிவில், நாட்டுபண்ணுடன் இந்த வருட பொதுகுழுக்கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| V. ஐயப்பன் | V கார்த்திகை ராஜன் |
| துனைத் தலைவர் | பொதுச் செயலாளர் |